இக்கொடிய விபத்தில் உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்ற விழைவை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) கள்ளக்குறிச்சி மாவட்டம், இரசாயனம் கலந்த சாராயம் அருந்தி முப்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரசாயனம் கலந்த சாராயம் அருந்தியதன் காரணமாக 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

சமூகத்தைப் பாழ்படுத்தும் இத்தகைய குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், இத்தகைய நிகழ்வில் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாகச் செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிகழ்வில் உயிரிழந்தவர்களை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், இத்துயர சம்பவங்களில் மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

(இ) திரு. நா. புகழேந்தி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு விக்கிரவாண்டி தொகுதியிலிருந்து பதினாறாவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றிய*

திரு. நா. புகழேந்தி அவர்கள், 6-4-2024 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இனிய பண்பும், எளிமையும் தன்னகத்தே கொண்டவரான திரு. நா. புகழேந்தி அவர்கள் கட்சி பாகுபாடின்றி, அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு பழகி, அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர். அரசின் திட்டங்களை தனது தொகுதி மக்களுக்குக் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவர். சமூகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (21-06-2024), வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****